களனிப் பல்கலைக்கழகம்

வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2026 ஜனவரி 23ஆம் திகதி வரை பொருத்தமான தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை களனி பல்கலைக்கழகம் கோருகின்றது.

01. பதவி: புத்தகம் கட்டுபவர் (தரம் III)
Book Binder

சம்பள முறை: **UPL 3 (III)** ரூபா 48,005 – 16 x 490 – 55,845 (01.01.2027 இல் உள்ளவாறு)

(அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ஆரம்ப மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ 80,798.00 ரூபா)

வயதெல்லை: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

02. பதவி: பொருத்துநர் (தரம் III)
Fitter

சம்பள முறை: **UPL 3 (III)** ரூபா 48,005 – 16 x 490 – 55,845 (01.01.2027 இல் உள்ளவாறு)

(அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ஆரம்ப மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ 80,798.00 ரூபா)

வயதெல்லை: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

03. பதவி: சாரதி (தரம் III)
Driver

சம்பள முறை: **UPL 3 (III)** ரூபா 48,005 – 16 x 490 – 55,845 (01.01.2027 இல் உள்ளவாறு)

(அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ஆரம்ப மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ 80,798.00 ரூபா)

வயதெல்லை: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

04. பதவி: டிராக்டர் இயக்குநர் (தரம் III)
Tractor Operator

சம்பள முறை: **UPL 2 (III)** ரூபா 44,575 – 16 x 490 – 52,415 (01.01.2027 இல் உள்ளவாறு)

(அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ஆரம்ப மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ 76,674.00 ரூபா)

வயதெல்லை: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

05. பதவி: தாதியர் – (ஒப்பந்தம் – இரண்டு வருடங்கள்)
Nurse – (Contract – Two Years)

ரூபா 51,095.00 (அடிப்படைச் சம்பளம்) + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

வயதெல்லை: 45 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனங்களில் எந்தவொரு பதவிக்கும் நியமிப்பதற்கு தகுதியற்ற நபர்கள்

(அ) பொதுத் திறமையின்மை காரணமாக கட்டாயமாக ஓய்வு பெற்றவர் அல்லது பணிநீக்கத்திற்கு மாற்றாக கருணை அடிப்படையில் ஓய்வு பெற்றவர் அல்லது முறையான விசாரணைக்குப் பிறகு ஒழுக்காற்று காரணங்களுக்காக சேவையிலிருந்து விலக்கப்பட்டவர் அல்லது பதவிநீக்கம் செய்யப்பட்டவர்

(ஆ) அரசுப் பணியில் இருந்தபோது அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சட்ட சபையில் பணியாற்றியபோது அல்லது ஆணைக்குழு அல்லது ஏதேனும் உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்தில் பணியாற்றியபோது பதவியை துறந்தவர்

(இ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றச் செயலுக்காக நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர்

(ஈ) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 449ஆம் பிரிவின் பிரகாரம், எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையிலும் நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர் அல்லது சுருக்கமான விசாரணைக்குப் பிறகு நீதிமன்றத்தால் தண்டனை பெற்றவர்

(இ) கடன் தீர்க்கமுடியாதவராக அறிவிக்கப்பட்டவர், ஆணைக்குழு அல்லது ஏதேனும் உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனத்திலோ எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படக்கூடாது. இருப்பினும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேலே உள்ள (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் உள்ளவர்கள் ஆணையக்குழுவின் முன் ஒப்புதலுடன் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படலாம்.

இலங்கைப் பிரஜைகள் அல்லாத நபர்கள் ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம்/ நிறுவனங்களில் எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படக்கூடாது.

எவ்வாறு விண்ணப்பிப்பது:

பல்கலைக்கழக இணையதளத்தில் (www.kln.ac.lk/vacancies) வெளியிடப்பட்டுள்ள மேலதிக விவரங்களுடன் கூடிய விளம்பரத்தைப் பார்க்கவும் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்யலாம். பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்விசாரா நிறுவனப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தளுகம, களனி என்ற முகவரிக்கு 2026 ஜனவரி 23ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

உயர் கல்வி நிறுவனங்கள், அரசுத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.

மேற்கண்ட அனைத்து பதவிகளுக்கும் அல்லது பேரவையின் திருப்திப்படுத்தப்படும் காரணத்திற்காக, அபேட்சகர்களை குறும் பட்டியலிடவும் / அல்லது ஆட்சேர்ப்பு செய்யாமல் இருக்கவும் பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு. இது தொடர்பில் பேரவையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத, தொடர்புடைய தகுதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படாத, முழுமையற்ற, தெளிவற்ற மற்றும் இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
களனிப் பல்கலைக்கழகம், களனி.
2026-01-07.